நிவாரணம்

இன்னும் விடிய ஆரம்பிக்காத இருட்டில் அந்தப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மனிதத் தலைகளால் நிரம்பியிருந்தது.

கடையையும் தாண்டி வீதி வரைக்கும் வரிசை நீண்டிருந்தது. வரிசையில் நின்றிருந்த பலர் கைகளில் வைத்திருந்த பிளாஸ்ரிக் கான்களை அடையாளத்துக்காய் நிலத்தில் வைத்துவிட்டு சுவரோரமாக ஒதுங்குவதை மூர்த்தி பார்த்துக் கொண்டிருந்தான்,

வெளியில் பனி கொட்டிக் கொண்டிருந்தது, உள்ளே போகலாம் ஆனால் இடம் பறி போய் விடும். அவனுக்குப் பயமாக இருந்தது.கானை வைத்துவிட்டு உள்ளே போனால் பிந்தி வந்த வர்கள் யாராவது இடத்தைப் பிடித்து விடுவார்களோ?

மணி வேறு தெரியவில்லை 'ஒரு ஐந்து ஐந்தரை இருக்குமா?'

கார்த்திகை மாதப்பனி மூசிக் கொண்டி ருந்தது குளிர் பொறுக்க முடியாமல் விறைத்த காதுகளை மறைக்க முக்காட்டை இழுத்து விட்டுக் கொண்டான். அங்கங்கே தையல் விட்டிருந்த சேர்ட்டுக்குள்ளாலும் அரைக் காற்சட்டைக்குள்ளாலும் குளிர் ஊடுருவியது. இரண்டு மூன்று மணிநேரமாக நின்ற கால்கள் கெஞ்சிக் கொண்டிருந்தன.

'இதிலேயே இருப்பதைத் தவிர வேறு வழியில்லை' யோசித்தவாறே மணலில் மடிந்து உட்கார்ந்தான்.

சுற்றி வர இருந்தவர்கள் காரசாரமாகப் பேசிக் கொண்டிருந்தனர். சிலர் குளிரை மறைப்ப தற்கு சுருட்டையோ பீடியையோ புகைத்துக் கொண்டிருந்தனர். இரண்டின் மணமும் கடைக் கட்டிடத்துக்கு அப்பால் மாறி மாறி எல்லோரும் பெய்து விட்டு வரும் மூத்திர நாற்றமுமாக அந்த அதிகாலை வேளையை துன்பம் மிகுந்ததாக மாற்றியதாக அவனுக்குத் தோன்றியது.

'டேய் மூர்த்தி இந்த என்ரை கானையும் வைச்சிரு' சொல்லிய படியே வந்த மாமா கையில் வைத்திருந்த கானை இவனிடம் திணித்துவிட்டு வம்பளக்கப் போனார். 'மண் ணெண்ணை வந்ததெண்டு உவன் மனேச்சர் நேற்றே சொன்னவன் ஆனா எப்ப குடுப்பாங்க ளெண்டு தெரியேல்லை' மாமா கதைத்துக் கொண்டே பீடியொன்றை உருவிப் பற்ற வைத்தார்.

மாமாவின் கானை வரிசையில் நிற்க வைப் பதா? இல்லை கையில் வைத்திருப்பதா? அவனுக்கு குழப்பமாக இருந்தது.

நேற்று கடைக்கு வரும் போதே மனே ச்சர் இவனிடமும் சொல்லிவிட்டிருந்தார் 'எட பெடி ஒவ்வொருநாளும் வந்து என்னை அரிப்பியே மண்ணெண்னை எப்ப வரும் எப்ப வருமெண்டு வந்திட்டுதாம் நாளைக்கு விடி விடியெண்ட வந்து நிண்டிடு பிறகு என்னை அரிக்காதை'.

மாமா கூட்டத்தில் பேச்சு சுவாரசியமாகப் போய்க்கொண்டிருந்தது.'பெரியாக்கள் கதைக் கிற இடத்திலை வாய் பார்க்கக் கூடாது' அம்மாவின் வார்த்தைகள் காதில் ஒலித்தன இப்போது வேறு வழியில்லை வாய் பார்த்துத் தான் ஆகவேண்டும். பேச்சு பெரும்பாலும் வர இருந்த மண்ணெண்ணை பற்றியே இருந்தது மனேச்சர் சொல்லாவிட்டாலும் அவர்கள் பேசிக்கொண்டிருந்ததிலிருந்து குடும்பத்துக்கு 2 லீற்றர் மட்டும்தான் கொடுப்பார்களென்று புரிந்தது. கானைத் தூக்கிப் பார்த்தான்.

லங்கா ஓயில் கான், 'ஐந்து, ஆறு லீற்றர் கொள்ளும்' திருப்தியுடன் தலையாட்டிக் கொள்கிறான்

மெல்ல மெல்ல விடிந்து கொண்டிருக்கிறது. தூக்கக் கலக்கத்தில் கண்கள் எரிந்தன. கண்களைக் கசக்கி விட்டுக் கொள்கிறான்.

சிறுகதை

எழுதியவர்: **ஈழநாதன்**

'நல்ல காலம் இண்டைக்குச் சனிக்கிழமை இல்லாட்டி எப்ப மண்ணெண்ணை வாங்கி எப்ப பள்ளிக்கூடம் போறது'.

பள்ளிக்கூடம் என்றதுமே அவனுக்கு நினைவு சுழன்றது. வீட்டில் மண்ணெண்ணை முடிந்து ஒரு கிழமையாகிறது.

வழக்கமாக ஜாம் போத்தலில் செய்த போத்தல் விளக்கில்தான் அவன் படிப்பதும் வீட்டுப் பாடம் செய்வதும். ஒருகிழமையா அதற்கும் இடமில்லை வீட்டில் துப்பரவாக மண்ணெண்ணை இல்லை. வெளியில் வாங்கலாமென்றால் யானை விலை குதிரை விலை,அம்மாவால் வாங்க முடியவில்லை. இனி நிவாரணத்தில் வாங்கினால்தான் உண்டு என்ற நிலை வந்தபோதுதான் அவன் சங்கக் கடை மனேச்சரை நச்சரிக்கத் தொடங்கியிருந் தான். மண்ணெண்ணை 'எப்ப வரும்' 'எப்ப வரும்' என்று.

இரண்டு மூன்று நாட்களுக்கு முன் கூட சீனி வாங்க இதே கடை வாசலில் இப்படியொரு வரிசையில் நின்றிருக்கிறான் அப்போது இல்லாத சந்தோஷம் இப்போது. 'மண்ணெண்ணை 2 லீற்றர் கிடைச்சா சந்தோஷம் வீட்டுப்பாடம் செய்யலாம் படிக்கலாம்,பள்ளிக்கூடத்தில் ஏச்சு வாங்கத் தேவையில்லை.'

பள்ளிக்கூடம் என்றவுடன் நேற்று நவமணி ரீச்சர் ஏசியது ஞாபகம் வருகிறது.

மண்ணெண்ணை இல்லையென்றதால் கணக்கு வீட்டுப்பாடம் செய்யவில்லை. முதல்நாள் பின்னேரமே செய்திருக்கலாம். வேலை பார்க்கும் சைக்கிள் கடை கந்த ண்ணை விடமாட்டார் ஏதாவது வேலை ஏவிக் கொண்டேயிருப்பார்.கடை பூட்டி வீடு வர இருண்டுவிட்டது.

ஓடி வந்து போத்தல் விளக்கை எடுத்துப் பார்த்தால் அடியில் போட்டிருந்த பஞ்சில் சிறு ஊறல் கூட இல்லை.'கொழுத்திப் பார்ப்பமா'? அந்த யோசனையையும் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால் எரித்துப் பார்த்து, புகைத்து விட்டு அடங்கிப்போன நினைவு வந்து தடுத்துவிடுகிறது.

இப்போது நினைத்தாலும் பயமாக இருக்கிறது. வகுப்பில் வைத்து ஏசி விட்டு இடைவேளை நேரம் ரீச்சர் வகுப்பறைக்கு கூப்பிட்டா 'என்னடா என் மேலை கோவமா' 'இல்லை' மெதுவாக முணுமுணுக்கிறான். 'உன்ரை நல்லதுக்குத் தானே சொன்னனான் வழமையா நீதான் வகுப்பிலை முதலாம் பிள்ளை. ஸ்கொலர்சிப்பிலையும் பள்ளிக் கூடத்திலை நீதான் கூட மார்க்ஸ் எடுத்தனி.

அதுகளைக் காட்டி வாற வருஷம் ஏழாம் வகுப்பிலிருந்து உதவித்தொகை குடுக்க முடியுமா எண்டு பழைய மாணவர் சங்கத்தைக் கேட்டிருக்கிறன்.அவையும் வாற தவணைப் பரீட்சையிலை உன்ரை மார்க்ஸைப் பார்த்துத் தரலாம் எண்டு சொலியிருக்கினம். இப்படிகொஞ்ச நாளாப் பார்க்கிறன் நீ கொஞ்சம் குறைஞ்ச மாதிரிக் கிடக்கு. என்னடா வீட்டிலை அம்மா வேலை சொன்னவாவே?'.

ஆசிரியையின் பரிவான வார்த்தைகள் பேசவிடாமல் தடுத்தன. சைக்கிள் கடையிலை வேலை செய்யுறதை ரீச்சரிட்டை சொல்லக் கூடாது ஏசுவா.

மண்ணெண்ணை இல்லை படிக்க எண்டு சொன்னால் தருவாதான் பிறகு அம்மா ஏசுவா ஒருத்தரிட்டையும் கைநீட்டக் கூடாது என்றது அவவின்ரை கொள்கை. இவன் பேசாமல் இனிப் படிக்கிறன் ரீச்சர் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டான்.

இப்போது நினைத்தால் பயமாக இருக்கிறது. இப்பிடி பின்னேரம் வேலை செய்து கொண்டு படிக்க முடியுமா?.

'கந்தண்ணை தாற கொஞ்சக் காசு தன்னும் அம்மாவுக்கு உதவியாக இருக்கு, அதையும் விடேலாது. வழக்கமா இரண்டாம் பிள்ளையா வாறது முரளி தான் அவன் மாமாவின்ரை மகன் தான் எண்டாலும் அவை வசதியானவை அவைக்கு உதவித் தொகை தேவையில்லை. நான் முதலாம் பிள்ளையாய் வந்தால்தான் எனக்குக் கிடைக்குமாம்.'

'கிடைத்தால் எவ்வளவு நல்லது !.மாமாவும் முரளி படிக்கிறதுக்காகத் தான் மண்ணெ ண்ணை வாங்க வந்திருப்பாரோ? மாமாவைத் திரும்பிப் பார்த்துக் கொள்கிறான் 'அப்படித் தான் இருக்கும். 'தவணைப் பரீட்சைக்கு இன் னும் ரண்டு கிழமைதான் இருக்கு' மனம் கன க்குப் போடுகிறது 1 லீற்றர் மண்ணெண்ணை 2 கிழமைக்கும் தாராளமாகப் போதும் பிறகு மிச்சத்திலை ஏழாம் ஆண்டுப் பாடப் புத்தகம் ஆரிட்டையும் வாங்கிப் படித்துக் கொள்ளலாம்.

'மண்ணெண்ணை இல்லாததாலை பெரிய கரைச்சல். அம்மா தங்கச்சிக்கு வெளிமுற்றத் திலிருந்து சாப்பாடு தீத்துவா அந்த மங்கல் வெளிச்சத்தில் எதுவும் படிக்க முடியாது.' இருக்கிற ஒரே ஒரு போத்தில் விளக்குதான் இவன் படிப்பதற்கும் அம்மா சமையல் செய்வதற்கும்

'இந்த ஒரு கிழமையா அம்மா கூட இருட்டுப் படமுதல் சமையலை முடித்துவிட்டு முற்றத்தில் வந்து உட்கார்ந்து விடுகிறா. மண்ணெண்ணை வந்தால் பிரச்சனையில்லை.'

மனம் அசை போட்டுக் கொண்டிருக் கும் போதே நன்றாக விடிந்து விட்டிருந்தது.

எட்டரைக்குத் தான் கடை திறப்பார்கள் இருந்தாலும் வரிசையில் இடம் பிடிப்பதற்காக அங்கங்கே சிதறிக் கிடந்தவர்கள் வந்து தங்கள் கான்களை எடுத்துக் கொண்டு வரிசையில் நிற்கத் தொடங்குகிறார்கள்.

மாமாவும் வந்து இவனின் கையிலிருந்த கானை வாங்கிக் கொண்டு இவனுக்கு முன்னால் நின்று கொள்கிறார்.

எட்டே முக்காலுக்கு மனேச்சரும் சேல்ஸ் மனும் வந்து கடையைத் திறக்கிறார்கள்.

மண்ணெண்ணை நேற்று கடை பூட்டும் நேரத்துக்கு வந்திருக்கிறது உள்ளே அடுக்கப் பட்டிருந்த மூன்று பரல்களையும் பார்த்ததும் இவனுக்கு மனநிம்மதி.

'இண்டைக்கு எப்பிடியும் கிடைக்கும்'. வரிசை நகர்கிறது. ஒவ்வொருவரும் பங்கீட்டு அட்டையைக் காட்டி மண்ணென்ணையைப் பெற்றுக்கொண்டு நகர்கிறார்கள். இவன் முறை வருகிறது, மனதெல்லாம் உவகை துள்ளுகிறது.

இதோ மண்ணெண்னை வந்து விட்டது.! உதவிக்கு நிற்பவர் பிளாஸ்ரிக் கானில் புனலை வைத்து நுரைக்க, நுரைக்க ஊற்றுகிறார்! இவனுக்குள்ளும் சந்தோஷ நுரை.இப்போதே தவணைப்பரீட்சை கண்களில் தெரிந்தது.

இரண்டு லீற்றர் மண்ணெண்ணை பெரிதாகக் கனக்கவில்லை, தூக்கிக் கொண்டு நடக்கும் போது கனப்பதாகத் தோன்றியது. வீட்டு வாசலில் மாமி நின்று அம்மாவுடன் பேசிக் கொண்டிருந்தா. இவனுக்கு ஆச்சரியம்

'இந்த விடியக்காலமையே வந்திருக்கிறா என்னவா இருக்கும்'

யோசித்தவாறே கானைப் படிக்கட்டில் வைக் கிறான். அம்மா அதனைத் தூக்கி மாமியிடம் கொடுக்கிறா.இவன் திகைத்துப் போய் பார்த்துக் கொண்டிருக்கிறான்.

மாமி கேற்றடியில் மறையும் வரை காத்திருந்த அம்மா மெல்லிய குரலில் சொல்கிறா

'அப்பன் தங்கைச்சிக்கு காய்ச்சலடா. இருந்த கொஞ்சக் காசையும் மண்ணெண்ணை வாங் கத் தந்திட்டன், கையிலை ஐஞ்சு சதம் இல்லை'.

'மாமி நிவாரண மண்ணெண்ணையை தன க்குத் தரச்சொல்லிக் கேட்டவா. வேண்டின விலையை விடக் கூடக் கேட்டதாலை குடுத்திட்டன்'. அம்மா பின்னேரம் மாவிடிக்கப் போவன் தானே காசு வந்தவுடனை மண்ணெண்ணை வாங்கித்தாறன்'

அம்மா சோர்ந்து போயிருக்கும் இவன் முகத்தைப் பார்க்க சக்தியற்றவராக உள்ளே போய்விட்டா.

அம்மாவிடம் காசு வரும், மண்ணெண்ணை திரும்பவும் வருமா?

மூர்த்திக்கு அழுகை வருகிறமாதிரி இருந் தது. நவமணி ரீச்சர்,எப்போதும் இரண்டாம் பிள்ளையாய் வரும் மாமியின் மகன் முரளி,மண்ணெண்ணை இல்லாது காய்ந்து போயிருக்கும் விளக்கு எல்லா நினைவுகளும் மாறி மாறிச் சுழன்றன.

கூடவே இன்னும் இரண்டு கிழமையால் வர இருக்கும் தவணைப் பரீட்சையும்...!

By Air or **By Sea** Weekly Sailings
TRY US and see the ***difference***

TRICO - *The name you can trust*

இலங்கை உட்பட 28 நாடுகளில் ட்ரைகோ 43 கிளைகள்
கொழும்பு காலி குருநாகலில் எமது சுங்க இணைக் களஞ்சியங்கள்

மிகக் குறைந்த செலவில் உங்களுக்கு சேவை செய்யக் காத்திருக்கிறோம்

*Bring your goods and do the packing in our warehouse itself, thereby saving money, **you spend on transporting.***

One T-Chest to **Sri Lanka - Only £10:** Transit Time Only **18 days**
Two T-Chests to **Chennai – Only £85:** Transit Time Only **27 days.**
Two T- Chests to **Cochin – Only £95:** Transit Time Only **27 days.**

Open 6 days a week!

TRICO
T: 020 8888 8787 F: 020 8889 5445
Email: dilan@tricoshipping.com
www.tricoshipping.com
Trico Shipping and Forwarding Ltd.
555 Whitehart Lane, London. N17 7RP